18. துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான ஒரு சில செலவினங்களை நான் எடுத்துக் கூறியுள்ளேன். உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கையில் இச் செலவினங்களுக்கும் பிற செலவினங்களுக்கும் உரிய விளக்கத்தைக் காணலாம் என்று கூறி, 1973-74 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

5. அரசின் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாறுதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"மேலவை விதி 21 (3)-ன் படி, 1974 மார்ச் 26 ஆம் நாள் அலுவல் பட்டியலிலுள்ள, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 10/74) 27—3—1974-க்கு ஒத்தி வைக்கப்பட வேண்டும்."

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"மேலவை விதி 21 (3)-ன்படி, 1974 மார்ச் 26 ஆம் நாள் அலுவல் பட்டியலிலுள்ள தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 10/74), 27—3—1974-க்கு ஒத்திவைக்கப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. ஓய்வு பெறும் உறுப்பினர்களுக்குப் பாராட்டுரை பகர்தல்.

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஏப்ரல் திங்கள் 20 ஆம் தேதி வரையிலும் இந்த மன்றத்தின் உறுப்பினர்களாக இருந்து, அதன் பின்னர் பல நண்பர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதால், அவர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கின்ற முறையில், முதன் முதலில் அதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தொடங்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க தலைவரவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, இந்தச் சபையின் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் பதவி விலகி, அந்தப் பதவிகளுக்குத் தேர்தல்களும் நடந்து வருவது வழக்கமாக இருக்கிறது. இப்பொழுது பதவி விலகும் 21 அங்கத்தினர்களுக்குப்